முருகப்பெருமான் துணை

**மகான் தண்டியடிகள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.10.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கராசா
ஞானலோகம் படைக்கும் வண்ணம்
தானதரும பலம் கூட்டியே
தனிப்பெருங் கருணை வடிவாக அருளும்
2. அருளும் அரங்கமகா ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
வரமென சோபகிருது துலைதிங்கள்
வல்லமைபட சப்தம திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07ம் நாள், 24.10.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசியை
வழங்குவேன் தண்டியடிகள் யானும்
பாரமான கருமவினை வென்று
பரோபகாரமிக்க ஞானவாழ்வு காண
4. காணவே கலிவாழ் மக்கள்
கந்தவேலன் சக்தியாக வந்த
ஞானதேசிகனை தேடிக் கண்டு
நம்பிக்கை வைத்து வருதல் வேண்டும்
5. வேண்டி மகா குரு என
விடாது தொடர்ந்து அனுகி
தொண்டுடன் சேவை ஆற்றி
தொடர்ந்து தருமத்தில் உதவி
6. உதவியே அரங்கன் தருகின்ற
உயர் தீட்சைகளை அடைந்து
ஆதரித்து அரங்கன் சன்மார்க்க
அறநெறி விட்டு அகலா வாழ

7. வாழுகின்ற மக்களின் வாழ்வில்
வடிவேலனார் அருட்தயவு
நாளும்நாளும் துணையாகக் கிட்டி
ஞானவாழ்வுதனை அடைய நேரும்

8. நேருமைபட உலக மக்களிடை
நீதி காக்கும் ஞானவான்களாக
வறுமை விரட்டி வருங்காலமதை
வளமாக்கும் சக்திமான்களாக

9. ஆகவே நிலைகளை உயர்த்தி
அகிலத்தில் புதுமை மாற்றம்
மகான்களின் ஆட்சி அமைக்க
மாண்புடன் சேவை ஆற்றுபவர்களாக

10. ஆகவே தேற்றம் அடைந்து
அகிலத்தில் ஞானிகள் தேர்வு செய்யும்
வகையான வல்லமையுடையவர்களாக
வருங்கால ஞானிகளாகவே தேறி

11. தேறியே அரங்கன் அவதார
தெய்வ ஞான ஆட்சியை
பேருலகம் கண்டடையும் வண்ணம்
பெருஞ்சேவை ஆற்றி நிலைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—